JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-5 Witness
for Prosecution

CC. No. 46/2025 Crime No. 14/2025 Station Appakodal

| | | |
|---|---|---|
| Name | PW-5-வெங்கிடுசாமி | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 14th day of November 2025 | | |

**எதிரிகள் ஆஜர்**

**எதிரி தரப்பில் மனு அளிக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரியல்ல, நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்றால், போலீசாரை கல்லில் அடித்ததாகவும், அவர்களை மிரட்டியதாகவும் எழுதியிருந்தார்கள். எதிரிகளுக்கும், போலீசாருக்கும் தகராறு என எழுதியிருந்தார்கள். மேலே குறிப்பிட்டுள்ள தாளில்தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான். நான் தட்டச்சு செய்த தாளில் கையொப்பம் செய்தேனா அல்லது எழுதிய தாளில் கையொப்பம் செய்தேனா என்றால், எழுதிய தாளில் கையொப்பம் செய்தேன். நான் ஆவணத்தில் கையொப்பம் செய்யும்போது ஆஜர் எதிரிகள் அங்கு இல்லை என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், எந்த ஒரு ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், என் முன்னிலையில் எந்த ஒரு ஆவணமும் கைப்பற்றவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் கையொப்பம் செய்தது தை 1ம் தேதி என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி பண்டிகை நாள் என்பதால் நான் மட்டும் தனியாக அங்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல. நான்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.14 18:16:17 +0530

கையொப்பம் செய்த தாளில் நான் கூறிய சங்கதிகள் எதுவும் இல்லை என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.14 18:16:23 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-4 Witness
for Prosecution

CC. No. 46/2025 Crime No. 14/2025 Station Appakodal

| Name | PW-4- முத்துராஜ் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 14th day of November 2025 | | |

**எதிரிகள் ஆஜர்**

**எதிரி தரப்பில் மனு அளிக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகளுக்கும், போலீஸ்காரர்களுக்கும் ஏற்பட்ட தகராறு குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால், சரிதான். போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய இரண்டு தாளிலும் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால், சரிதான். என்னிடம் போலீசார் கையொப்பம் வாங்கும்போது என்னுடன் வேறு யார் இருந்தார்கள் என்றால் 6 போலீஸ்காரர்கள் மற்றும் கும்பலாக மக்களும் இருந்தனர். போலீசார் என் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால், சரிதான். போலீசார் வைத்திருந்தார்கள். என்னிடம் காண்பித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த ஒரு ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் கையொப்பம் செய்தபோது ஆஜர் எதிரிகள் அங்கு இல்லை என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.14 18:16:32 +0530

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.